உ

கடவுள் துணை

# செந்தமிழ்

தொகுதி-௫௰.] ஜய-௵—சித்திரை-மீ [பகுதி-௬.

Vol. 50. April—May 1954. No. 6.

## திணைச்சொல் விளக்கம்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

தமிழ் இலக்கண நூல்களில் பெயர்ச்சொல் வினைச்சொல் இவற்றைப் பகுக்குமிடங்களில் உயர்திணைச் சொல் அஃறிணைச் சொல் என, திணை என்னும் அடைமொழி கொடுத்துத் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. அவ் அடைமொழியாகிய திணை என்னும் பெயர்க்குப் பொருளுரைக்கும் உரையாசிரியருள் ஒரு சிலர் ஒழுக்கம் என்றும், வேறு சிலர் குலம் என்றும் பொருளுரைத்துச் செல்வர்.

அவர் கூறும் பொருள் அச் சொல்லுக்கு உளவாயிருப்பினும், உயர்திணை அஃறிணை என்னும் குறியீட்டினுள்ளும் அப் பொருளே கொள்ளவேண்டுமென்பது ஒருதலை யன்று. ஏனெனில் ஒழுக்கமும் குலமும் பற்றியே அப் பொருள்கள் பிரிக்கப் பட்டனவாயில்லை.

அன்றியும் குலம் என்பது உயர்குடிப் பிறப்பையும், ஒன்றன் தொகுதியையும் உணர்த்தும் பெயராயிருப்பதால், உயர்திணைக்கண் முழுதும் செல்லாமையால் இலக்கணமாகாது. கூட்டம் எனின் அஃது உயர்திணைக்கண் முழுதும் செல்லுவதோடு, அஃறிணைக்கண்ணும் அவ்வுயர்வல்லாத கூட்டம் எனப் பொருள்பட்டு, முழுதும் செல்லுவதாகும். ஆயினும் ஒருமைப் பொருளில் அக் கூட்டம்

இன்மையாற் குறைவுடையதாகிறது. ஆதலால் அவை பொருளோ அன்றோ? என்று ஆராயத்தக்கது.

இத் திணையென்னும் சொல் அகப்பொருள் புறப்பொருள் இலக்கணங்களிலும், குறிஞ்சி வஞ்சி முதலிய அடையடுத்து குறிஞ் சித் திணை வஞ்சித்திணை என்றற் றொடக்கத்தனவாக வழங்கப்படு கிறது. ஒரு நூலகத்துப் பலவிடங்களிலும் வழங்கப்பட்டு வரும் ஒரு சொல்லுக்குப் பெயர்க்காரணம் ஒருபடியாயிருப்பதே சிறப் புடைத்தாம் என்று கருதி, அங்கும் ஒழுக்கம் என்றே பொரு ளுரைக்கின்றனர். ஒழுக்கம் என்பது இடையறவுபடாது இயலும் இயக்கத்தையே குறிப்பாலுணர்த்தற் குரியது. அகத்திணை புறத் திணைப் பொருள்களுக்கு இடையறவுபடாமை இன்மையால், அவற்றை ஒழுக்கம் என்னும் சொல்லுக்குப் பொருளாகக்கொள்ளு தல் கூடாது. கூடுமேல் பெருந்திணை பேரொழுக்க மென்றும், நற் றிணை நல்லொழுக்க மென்றும் பொருள்பட வேண்டும். அங்ஙனம் பொருள்படாமையானும் ஈண்டுத் திணையென்னும்பெயர்க்கு ஒழுக்க மெனப் பொருள் கொள்ளுதல் பொருந்தாதாகின்றது.

பின்னை என்னையோ பொருள் எனில், நன்னூலாரால் "கிளை யெண்குழூஉ" என்னுஞ் சூத்திரத்தில், "திணை தேம் ஊர் வான் அகம் புறம் முதல நிலன்" என்றதனால், திணை யென்னுஞ் சொல் லுக்கு நிலவிசேடம் பொருளாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் என்பதற்கு நிற்றற்குரிய இடமாயுள்ளது என்பது பொருள்.

சேனாவரையரும் சொல்நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாதலால், "ஆயிருதிணையின் (கண்) இசைக்குமன சொல்லே என்றார் (ஆசிரி யர்)" என உரைத்தனர். இதனாலே சொல்நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாம் என்பது பெறப்பட்டது. இடம், நிலம், நிலைக்களம் என் பன ஒரு பொருள. சொல்நிகழ்ச்சியாவது, சொற்களை வழங்கு தலேயாம்.

இதன்மேலும் அவரே "செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்" என்னுஞ் சூத்திரத்தானும் இக் கருத்துத் தொல் காப்பியனார்க்கும் உள்ளதென்று காட்டினார். இவற்றானே திணை யென்னுஞ் சொல் நிலம், இடம், தேம் என்பதன் பரியாயமாம் என் பது பெறப்பட்டது.

பெறவே, தேசபரியாயமான விஷய சப்தத்தால் வடமொழியாளர் பொருள்களை வழங்குவது போலவே, தமிழிலும் அவ்விஷய சப்த பரியாயமாகிய திணை யென்னுஞ் சொல்லால் பொருள்கள் வழங்கப்பட்டு வருவனவாகக் கொள்ளுதல் பொருத்த முடையது. "இச் சொல் இப் பொருளில் வழங்கப்படும்" என உலக வழக்குண்மையும் இதற்குச் சான்றாகும்.

ஆகவே, உயர்திணை என்பது உயர் பொருள், உயர்வான விஷயம் எனவும்; அல்திணை என்பது அவ்வுயர் வல்லாத பொருள், உயர்வல்லாத விஷயம் எனவும் கொள்ளத் தகும். அகப் பொருளிலக்கணத்திலும், குறிஞ்சித்திணை என்பது குறிஞ்சி விஷயம் குறிஞ்சிப் பொருள் எனவும் முல்லைத் திணை முல்லை விஷயம் முல்லைப் பொருள் எனவும் கொள்ளலாகும். இவ்வாறே புறப்பொருளிலும், வஞ்சித்திணை வஞ்சிவிஷயம் வஞ்சிப்பொருள் பாடாண்திணை பாடாண் விஷயம் பாடாண் பொருள் எனக் கொள்ளப்பெறும்.

வடநூலாரும் நூற்பொருள்களை எல்லாம் விஷயம் என்று வழங்குவது போல, தமிழிலும் திணை என்னும் சொல்லால் வழங்கினர் எனக் கொள்ளுதலே நேர். பகவானை விஷயமாகக் கொண்டதொரு திருவாய்மொழிப் பேருரையை பகவத்விஷயம் என்று வைஷ்ணவர்கள் வழங்குவதாலும், சாஸ்திரங்களாற் சொல்லப்படும் பொருளை சாஸ்திர விஷயம் என்று பிறருஞ் சொல்லுவதாலும், இதன் உண்மை நன்கறியலாகும்.

இதனால் திணை என்பது நிலம், இடம், பொருள் என்பவற்றின் பரியாயபதமாதல் முடிந்தது. நிற்றற்குரியது நிலமாவது போல, இடுதற்குரியது இடம் என்பதாம். பொருள் என்பது பெருவுதலுடையது என்னும் பொருளது. பொருவுதலாவது, ஒருவாற்றான் ஒற்றுமையும் பிறிதோராற்றான் வேற்றுமையுமுடைமை. இவ்வியல்பு, சொல்லொடு சொல்லால் உணரப்படுமவற்றிற்கு உண்மையால், அவை பொருள் எனப்பட்டன. இவ் வொற்றுமையை "ஒருபுடை ஒற்றுமை" என்றார் சேனாவரையர். ஒருபுடை ஒற்றுமை எனினும் ஏகதேச சாமியம் எனினும் ஒக்கும்.

இச் சிற்றாராய்ச்சி, முன்னாள் இச் செந்தமிழ்ப் பத்திராசிரியரா யிருந்த என் தந்தையார் ஸ்ரீ திரு, நாராயணையங்காரவர்கள் எழுதி வைத்துச்சென்ற, ஒரு கைக்குறிப்பில் இருந்தவாறே படியெடுக்கப் பெற்றது. இலக்கண நூலின் சொல், பொருள் அதிகாரங்களிற் பயின்ற திணை யென்னும் குறியீடான ஒரு சொல் ஈரிடத்தும் ஒரே பொருள் கருதியதாகல்வேண்டுமென்பது சிறந்த கோட்பாடேயாம். அதனால் இரண்டற்குமேற்ப, திணையென்பது 'விஷயம்' அல்லது 'பொருள்வகை' எனக் கொள்ளல் இவ்வாராய்ச்சியின் நோக்கமா யுள்ளது.

இவ்வாறு இரண்டிடத்துக்கும் ஏற்ற பொருள்கூறக் கருதியே, பொருளதிகாரத்தில் ஒழுக்கம் எனப் பொருள்கண்ட ஒருசார் ஆசிரியர், சொல்லதிகாரத்திலும் திணைச்சொல்லுக்கு 'ஒழுக்கம்' எனப் பொருள்கொண்டனர். ஆயினும் பிறர் இதனை மறுத்து, சொல்லதிகாரத்தில், 'குலம்' எனப் பொருள் கூறுவர். சொல்லிலக்கணத்தில் ஒழுக்கம் கருதவேண்டுவதின்று; அஃறிணையிற் சிலவற்றிற்கு அவ்வொழுக்கம் இல்லை: என்பன அவர்கூறும் காரணங்களாம். ஆனால் குலம், குடிப்பிறப்பு, என்ற பொருளிலும் இக்குற்றங்கள் தங்கும். குலம், கூட்டம் எனப் பொருள்கொண்டால், அஃது ஒருமைப்பொருட்கு ஏலாதாம். அன்றியும் பொருளதிகாரத்தில் அப்பொருள் சிறிதும் பொருந்தாது.

தெய்வச்சிலையாரும், மயிலைநாதரும் 'திணை—பொருள்' எனச் செவ்வனம் உரையெழுதியுள்ளனர். ஆயினும் நிகண்டுகூறிய மூவகைப்பொருளினின்று, இப்பொருள்வந்த வரலாற்றுவழி விளக்கம் பெறவில்லை. அன்றியும் 'விஷயம்' என்றதுபோல, இது திணைப் பொருளை நன்கு வரைந்து சுட்டுவதும் ஆகாது. எனவே குலம், ஒழுக்கம் என்ற பொருள்கள் குற்றமுடைமையால், 'நிலம்' என்ற பொருளுக்கு ஈடாக 'வழக்குக்கு நிலைக்களமான பொருள்' அல்லது 'விஷயம்' என்பதே திணைச்சொல்லின் தேர்ந்தபொருள் என இவ் வாராய்ச்சியான் முடிந்தது.

# அகவன்மகள்

[திரு. பண்டித-கு. வே. நடராசன் அவர்கள், மதுரை.]

பண்டைக்கால இலக்கியங்களினின்று நாம் அறிந்துகொள்ளுதற்குரிய செய்திகள் பல உள. அவைகளை இன்றும் அறிஞர்கள் ஆய்ந்து கண்டவண்ணமே உள்ளனர். அப் பேரறிஞர்கள் ஆய்ந்து காணும் முடிவுகள் நமக்குப் பெரும் மகிழ்வையூட்டுகின்றன என்பது ஒருதலை.

சங்ககால இலக்கியங்களிற் கண்ட சொற்களிற் சில இக் காலத்து வழக்கு வீழ்ந்தன; சில தத்தம் பண்டைப்பொருளை இழந்து வேற்றுப் பொருளில் வழங்கப்பெற்று வருகின்றன. பழங்காலத்துப் பழக்கவழக்கங்களுள்ளும் சில இக் காலத்தும் நிகழப்பெறுகின்றன. அவைகளுள்ளும் சில முற்றிலும் வேறுபட்ட பெயர்களால் வழக்குப்பெற்று இயலுகின்றன.

நமது பழந்தமிழ் இலக்கியநூல்களில் 'அகவன்மகள்' என்னுஞ் சொற்றொடரைச் சில இடங்களில் நாம் காண்கின்றோம். ஆயின் அது இக்கால வழக்கில் வழங்கப் பெறவில்லை. எனினும் அச் சொற்றொடர் வேற்றுச் சொல்லால் இன்றும் வழங்கப்பெற்றே வருகின்றது. ஆகவே, அதன் உண்மைப் பொருளையும், இக் கால வழக்கில் அது பயிலும் முறையையும் ஈண்டுக் காண்போம்.

அகவன்மகளிரின் இயல்புகளைச் சங்க இலக்கியங்களினின்று பின்வருமாறு தொகுத்துக் கூற இயலும். "அகவன்மகளிர் மலைவாழ் சாதியினர்; சங்குமணிகளாலாகிய அணிகளை அணிந்தவர்; கையிற் சிறுகோல் தாங்கி ஊர்ஊராய்ச் சுற்றித் திரிபவர்; நாட்டுவளனையும்; மலைவளனையும் நேரிற்கண்டு பாடி மகிழ்ந்து பேரின்பம்

கொள்கின்றவர்; குரவைக்கூத்து நிகழ்த்தலும், கட்டுக்காணலும் ஆகிய வழக்கங்களை உடையவர்." இத்தகைய செய்திகளையே அந் நூல்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள இயலுகின்றது.

இனி, அகவன்மகள் கட்டுநோக்கிய செய்தி ஒன்றை ஈண்டுக் குறித்தல் சாலவும் ஏற்புடையதாகும். களவொழுக்கத்தே ஒழுகிய தலைமகன் ஒருவன் தலைவிமாட்டு நிகழும் பழிச்சொற்கு அஞ்சி அவளைப் பிரிந்து சென்றான். அக்கணமே தலைவியின் மேனி பசலை நோயுற்றது; அவளது மூங்கில்போன்று பணைத்தெழுந்த மெல்லிய தோள்கள் மெலிந்துபட்டன; கைகளிலுள்ள தொடிகள் கழன்று விழுந்தன; அவளது வாணுதல் திலகத்தை இழந்தது; தடங் கண்கள் அஞ்சனத்தைத் துறந்தன; சிறடிகள் செம்பஞ்சுக் குழம்பை மறந்தன. அவளுக்கோ உண்டியில் விருப்பில்லை; அவள் இனிய பாலும் உண்ணவில்லை; பழமுங் கொள்ளவில்லை. நாட்களும் சில கடந்தன. தலைவனோ இன்னும் மீண்டு வந்தபாடில்லை. தலைவி அகம் நொந்து வெந்தாள்; காமநோய் அவள் உள்ளத்தைக் கருக்கியது. அவள் அன்புடனே கூடி முயங்கப் பெறும் இன்பத்திற்கு ஏற்பட்ட இடையூற்றை எண்ணி எண்ணி மாழ்கி நொந்தாள். இந் நிலையில் தாயர், மகளின்பாற் காணப்பெற்ற வேறுபாட்டிற் குரிய ஏதுவினை அறிய விழைந்தனர். இதன் பொருட்டுக் கட்டுக்காண்பது அக்கால வழக்கம். அதனை

"நன்னுதற் பரந்த பசலைகண் டன்னை
செம்முது பெண்டிரொடு நென்முன் நிறீஇக்
கட்டிற் கேட்கு மாயின்"

என்னும் நற்றிணைச்செய்யுட் பகுதியால் உணரலாம்.

இன்னணம் தாயர் கட்டுக்காண ஒருப்பட்டு நின்றபொழுது, அகவன்மகள் ஒருத்தி அவ்வழியே வரலாயினள். அவள் நரைத்த தலைமயிர் உடையவள்; வெண் சங்கினால் ஆகிய அணிகளை அணிந் தவள்; நீண்ட தொலைவிலிருந்தே பல குன்றுகளையும் அவற்றின்

வளங்களையும் பாடிக்கொண்டு வருபவள். இம்முதுமகளினை அழைத்துத் தாயர் கட்டுக் காணுமாறு நின்றனர். அம் மகளும் சுளகில் நெல்லைப் பரப்பித் தெய்வங்களை அழைத்துப் பாடத்தொடங்கினள். இவ்வமயத்தில் தோழி அம் முதுமகளை நோக்கி 'அகவன் மகளே' 'அகவன் மகளே' என விளித்தாள். அம் மகளின் கழுத்திற் காணப்பெற்ற சங்குமணிகளின் நிறமும், அவளது நரைத்த தலைமயிரின் நிறமும் தம்முள் வேறுபாடின்றிக் காணப்பட்டன இதனைக் கண்ணுற்ற தோழி 'மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல் அகவன் மகளே' என மீண்டும் ஒருமுறை விளித்தனள் விளித்துப் 'பாட்டைப் பாடுக' என்று கூறினள். பெயர்த்தும் 'அவரது குன்றத்தைப் பாடிய பாடலைப் பாடுக' என்றாள். தோழி அவரது குன்றம் என்று கூறியதும், எவரது குன்றம்? என்னும் வினா ஆண்டு எழலாயிற்று. அவ் வினாவின் பயனாகத் தமது மகட்குரிய வேறுபாடு ஒரு ஆடவனால் நிகழ்ந்தது என்பதைத் தாயர் மாறுபாடில்லாது அறிந்து கொண்டனர். இந் நிகழ்ச்சியை ஒளவையார் என்னும் பெண்பாற் புலவர்

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே

என வனப்புற அமைத்துக் காட்டுகின்றார்.

இக் குறுந்தொகைச் செய்யுள் கட்டுக்காண நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்ற நிலைக்கு இலக்கியமாக எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. இதனில் களவொழுக்கத்தை நாகரிக முறையில் நயம்பட எடுத்துக்காட்டும் பண்பு பெரிதும் வியந்து போற்றற்குரியது. நிற்க.

இங்குக் காட்டியவற்றால் கட்டுரைத்தல் அகவன் மகளிரின் இயல்பு என்பது விளக்கமாகும். ஆயின் கட்டுரைத்தல் என்பது

என்னை? கட்டுரைத்தல் என்பது, முறத்தில் நெல்லைப் பரப்பித் தெய்வங்களை அழைத்துப் பாடி எண்ணிப் பார்த்து நிமித்தம் அறிந்து கூறுவது.

கட்டறி மகடூஉ கடிமுறத் திட்ட
வட்ட நெல்லு மாண்பில பெரிதென

என்பன பெருங்கதை அடிகளாம்.

இவ் வடிகளுக்குக் குறிப்புரை வரைந்த மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் அவர்களும் 'கட்டறி மகடூஉ-கட்டுப்பார்த்தலை அறிந்த மகள்; கட்டுவிச்சி; கட்டாவது சிறு முறத்திற் பரப்பிய நெல்லிற் பார்க்கும் ஒருவகைக் குறி' என்றே குறிப்பிட்டுள்ளார்கள். இதனாலும் கட்டுக்காணலின் இயல்பு நன்கு புலப்படும்.

திருக்கோவையாரில் வரைபொருட் பிரிதல் என்னும் பகுதியில் 'கட்டு வைப்பித்தல்' 'கட்டுவித்தி கூறல்' என இரண்டு துறைகள் மணிவாசகப் பெருமான் அருளியுள்ளார். அத்துறைகளின் கொளுக்கள் பின் வருமாறு:

1. மால் கொண்ட கட்டுக், கால் கொண்டது.
2. கட்டுவித்தி, விட்டு ரைத்தது.

திருக்கோவையாருக்கு உரைகண்ட ஆசிரியர் மேற்கூறப் பெற்ற துறைகட்கு 'கட்டு வைப்பித்த லென்பது, மெலிவுகண்ட செவிலி அவளது பருவங்கூறி, இவ் வணங்குற்ற நோயைத் தெரியவறிந்து சொல்லுமினென, கட்டுவித்திக் குரைத்துக் கட்டு வைப்பியா நிற்றல்'; எனவும் 'கட்டுவித்தி கூறலென்பது தோழி கலக்கமுற்று நில்லா நிற்ப, இருவரையு நன்மையாகக் கூட்டுவித்த தெய்வம் புறத்தாற் கின் வொழுக்கம் புலப்படாமல் தானிட்ட நெல்லின்கண் முருகனைக் காட்ட, இதனை யெல்லீருங் காண்மின்; இவளுக்கு முருகனையொழியப் பிறிதொன்றுமில்லை யெனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறாநிற்றல்' எனவும் விளக்கவுரை வரைந்துள்ளனர்.

கட்டு வைப்பித்தல் என்னுந் துறைக்கு இலக்கியமாக,

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற் றிலசொற் றெளிவுற்றில
குணங்குற்றங் கொள்ளும் பருவ முறுள்குறு காவசுரார்
ணங்குற்ற வேற்சிவன் சிற்றம் பலவெஞ் சுருதவர்போல்
அணங்குற்ற நோயறி வுற்றுரை யாடுமி னன்னையரே.

என்றும்;

கட்டுவித்தி கூறல் என்னுந் துறைக்கு இலக்கியமாக,

குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா விறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவவ் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற் றோன்று மவன்வடிவே.

என்றும்;

மணிவாசகர் அருளியதுங் காண்க.

'குயிலிதன்றே' என்னும் பாடலின் விளக்கவுரையில் "குறிக் கிலக்கணம் தென் மூன்றுமிரண்டு மொன்றும் படுகை; அஃதாவது அடியுங் கொடியு முவகையும்; இதனில், அடியாவது மயில், கொடி யாவது கோழி, உவகையாவது வேல், ஆதலான் முருகனங் கெனவே கூறப்பட்டதென வறிக" என ஆசிரியர் ஓதியவாறுங் காண்க.

மேற்காட்டப் பெற்ற திருக்கோவையார்த் துறைகளாலும், அவற்றின் கொளுக்களாலும், செய்யுட்களாலும், விளக்க வுரை களாலும், தலைவியின் மெலிவைக் கட்டுவித்திக்கு உரைத்துக் கட் டுக்காணும் வழக்கம் உண்மையும், கட்டுவித்தி நெற்குறியால் முருகன் வடிவு கண்டு கூறலும் பிறவுந் தெளியப்படும். தெளியவே கட்டுக் காண்பதால் அம்மகள் கட்டுவித்தி எனப் பெயர்பெற்றனள் என்பதும் புலனுகும் இதனைக் குறிஞ்சிப்பாட்டின் அடிக் குறிப்பில் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் அவர்கள் "கட்டு- சிறு முறத்திற் பரப்பிய நெல்லிற் பார்க்கும் ஒருவகைக் குறி; இங்ங னம் குறி பார்ப்பவள் கட்டுவித்தி யெனப்படுவாள்" என்று குறித் துச் செல்வதாலும் தெளிந்துகொள்ளலாம்.

சங்ககால இலக்கியங்களினின்று கட்டுக்காணும் வழக்கம் உண்டென்றும், அக் கட்டினைக் கண்டு கூறுபவள் அகவன்மகள் என்றுங் கண்டோம். ஆகவே, அகவன்மகள் கட்டுக் காணும் இயல்பினை உடையவள்; ஆதலால், அவளே கட்டறி மகடூஉ என்றும், கட்டுவித்தி என்றும் பிற்காலத்தில் வழங்கப்படலாயினள்.

கட்டுவித்தி என்னுஞ் சொல் பிற்காலத்துக் கட்டுவிச்சி என வழங்கலாயிற்று.

> கட்டுவிச்சி கட்டேறிச்
> சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
> வேரா விதிர்விதிராக் கைமோவாப்
> பேராயிர முடையா னென்றாள்.

> இதுகாண்மின் அன்னைமீர் இக் கட்டுவிச்சி சொற்கொண்டு நீர்
> எதுவானுஞ் செய்தங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்.

என்பன திவ்யப்பிரபந்தம்.

தொல்காப்பிய உரையில் 'கட்டுவிச்சியும் வேலனும் தாம் பார்த்த கட்டினானும் கழங்கினானும்' என்று நச்சினார்க்கினியரும் கூறினார். எனவே கட்டுவித்தி என்பது பிற்காலத்தே கட்டுவிச்சி என வழங்கலாயிற்று என்பது வெள்ளிடை மலை. ஆகவே அகவன் மகள் என்பது கட்டுவித்தி எனப் பிற்காலத்தே வழக்குப்பெற்று, அதனினும் பிற்காலத்தே கட்டுவிச்சி என வழக்குப்பெறலாயிற்று என்று துணியலாம்.

கட்டுக் காண்பதால் கட்டுவித்தி எனப் பெயர்பெற்ற அம் மகள் தெய்வங்களை அழைத்துப் பாடியதால் அகவன்மகள் என்று அழைக்கப் பெற்றனள் (அகவல்—அழைத்தல்). "அகவிக் கூறலின் அகவலாயிற்று......அதனை வழக்கினுள் அழைத்தல் என்ப" என நச்சினார்க்கினியரும், "அதனை வழக்கினுள் அழைத்த லென்றுஞ் சொல்ப; அவை......கட்டுங் கழங்கும் இட்டுரைப்பார் கண்ணும்... கேட்கப்படும்"; எனப் பேராசிரியரும் கூறுமாறு காண்க.

கட்டுக்காணும் வழக்கம் பெரும்பாலும் நாட்டுப் புறங்களில் இன்றும் நடைபெறக் காண்கின்றோம். ஆனால் அது பண்டைக் காலத்து நிகழ்ப்பெற்ற நோக்கத்தோடு நிகழ்ப்பெறவில்லை. இன்று

அது ஒரு இல்லத்திற்குறும் நல்லவுந் தீயவும் நாடி அறியும் நோக்குடன் கேட்கப்படுகின்றது. அஃதுடன் அது கட்டு என்னும் பெயரினும் இக் காலத்து வழக்கப்பெறவில்லை. இச் சொல் வழக்கற்றுப் போய்க் 'குறி காணல்' 'குறி கூறல்' என்னும் குறியீடுகள் பெற்று இயலுகின்றது. எனவே முற்காலத்துக் கூறப்பெற்ற 'கட்டு' என்பது பிற்காலத்துக் கூறுகின்ற 'குறியே' ஆகும். இக் காலவழக்கில், குறி கூறுபவள் குறத்தி அல்லது குறமகள் எனப்படுகின்றாள். எனவே கட்டுவித்தி எனக் கூறப்பெற்றவள் குறமகளே ஆவள் என்பது தேற்றம். பிற்காலத்தில் தோன்றிய கலம்பகம், குறம், குறவஞ்சி முதலிய சிறு நூல்களிலும் 'குறத்தி குறிகூறல்' 'நாட்டு வளங் கூறல்' 'மலைவளங் கூறல்' என்பனவாகிய துறைகள் அமைத்துக் காட்டப்படுகின்றன. இதுகாறும் எடுத்துக் காட்டப்பெற்றவைகளிலிருந்து 'அகவன்மகள்' என்றும், கட்டு என்றும் வழங்கப் பெற்றவை, இக்காலத்தில் குறத்தி என்றும் குறி என்றும் ஆட்சி பெறுகின்றன என்பது நனி விளங்கும்.

சங்க இலக்கியங்களில் அகவன்மகள் என ஆட்சிபெற்றது, பிற்கால இலக்கியங்களில் கட்டறி மகடூஉ, கட்டுவித்தி என்றும் ஆட்சி பெற்றது. இன்னும் பிற்பட்ட இலக்கியங்களில் கட்டுவிச்சி என வழங்கப் பெற்றது. அதனினும் பிற்பட்ட இலக்கியங்களிலும் இக் காலத்திலும் குறத்தி என வழக்காட்சி பெறுகின்றது. தெய்வங்களை அழைத்துப் பாடுவதால் அகவன்மகள் என்றும், கட்டுப் பார்த்தலை அறிந்த மகள் ஆகையால் கட்டறி மகடூஉ என்றும், கட்டுப் பார்ப்பதால் கட்டுவித்தி, கட்டுவிச்சி என்றும், குறி காண்பதால் குறத்தி என்றும் பெயர் பெறலாயினர் என்பது நன்கு புலப்படும். புலப்படவே, அகவன்மகள், கட்டறி மகடூஉ, கட்டுவித்தி, கட்டுவிச்சி, குறத்தி என்பவை அனைத்தும் ஒருவளைக் கூறும் பல பெயர்க்கிளவி என்பதும், அம் மகளிர் கண்ட கட்டு, குறி எனப் பெயர்பெற்று வழங்குகின்றது என்பதும் தெளிவாம்.

---

# கம்பரும் துளஸிதாஸரும்-எ

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

(919-ம் பக்கத்தொடர்ச்சி)

## இராமன் யார்?

இந்த ஐயவினா பரத்வாஜ முனிவருக்கு எழுந்தது. அவர் யாக்ஞவல்க்ய முனிவரிடம் கேட்டார்:

அறிவில் வல்லோனே, இராமன் யார்? அவன் பெயரைப் பரமசிவன் விடாமல் ஜபிக்கின்றார். அவன் பெயரை வேதமும் உபநிஷத்துக்களும் பாடுகின்றன! கருணைக் கடலே அந்த இராமன் யார்? மற்றும் அயோத்தியரசனுக்கு மைந்தனாகப் பிறந்த ஒரு இராமன் உண்டே! மனைவியை இழந்து எழுந்த கோபத்தால் இராவணனைச் செற்று வெற்றிகொண்ட அவன் பெருமையையும் உலகம் போற்றுகின்றதே. சிவன் போற்றும் இராமன் வேறு, அந்த அயோத்தியரசன் இராமன் வேறு தானோ? சொல்லவேண்டும் என்றார்.

இந்தக் கேள்வி யாக்ஞவல்க்ய முனிவருக்கு அதிசயமாகப் பட்டது. என்றாலும் பதில் சொல்லத் தொடங்கிய அவர் நேரடியாக விடையிறுக்காமல் ஒரு கதையைச் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஒருமுறை பரமசிவனும் அவர் தம் தேவியான தக்ஷன் மகள் சதிதேவியும் அகஸ்தியமுனிவரிடம் சென்றனர். பரமசிவனும் அகஸ்தியமுனிவரும் இராமன்கதையைப் பேசி அளவளாவினர். பேசிவிட்டுத் திரும்பிவரும் வழியில் சிவன் இராமபிரானைத் தரிசனம் செய்ய ஆவல்கொண்டார்.

அதேசமயம் இராமபிரான் மனைவியை இராவணன் தூக்கிப் போய்விட அவர் தம்பியுடன் வருந்தி வனத்தில் அலைந்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில் சம்புவும் அவரைக் கண்டு உள்ளம்

புளகம் அடைந்தார். இதைக் கண்ட சதிதேவியின் உள்ளத்தில் ஐயம் எழுந்தது.

சங்கர் ஜகதவந்த்ய ஜகதீசா
தின ந்ருப கீன்ஹ பரநாமா.

சங்கரன் உலகம் ஏத்தும் பரம்பொருளாயிற்றே. அவர் ஏன் அரச குமாரனை வணங்கினார்?

ப்ரஹ்ம ஜோ வ்யாபக விரஜ அஜ நிர்குண அகல அபேத
ஸோ கி தேஹ தரி ஹோயி நர ஜாஹி நஜாநத வேத.

எங்கும் பரவி, மாயைக்கும் அப்பாற்பட்டு, ஆதியும் அந்தமும் இன்றி நிலைமாற்றம், தோற்றம் குணம் ஒன்றும் இல்லாமல் இருக்கும் அந்த வேதமும் அறிய இயலாத பரம்பொருள் மனிதஉரு எடுக்குமா? அல்லது

விஷ்ணு ஜோ ஸுரஹித நரதனு தாரீ?

விஷ்ணு ஒருகால் மனிதர்களுக்கு உதவ மனித உருவம் எடுத்திருந்தால்,

ஸோ உ ஸர்வக்ஞ யதா திரிபுராரி

அவரும் முப்புரம் எரித்தோனைப்போல எல்லாம் அறிந்தவராயிற்றே;

கோ ஜஹிம் ஸோ கி அக்ஞ இவ நாரீ?

அவர் எங்கேயாவது ஒன்றும் அறியாதவன் போல் மனைவியைத் தேடி அலைவாரா? என்றெல்லாம் அவள் எண்ணினாள்.

இந்த ஐயத்தை சதிதேவி வாய்திறந்து சொல்லவில்லையாயினும் சங்கரன் தெரிந்துகொண்டார். ஆகவே அவர் சதிதேவிக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார்.

"சதியே! உனக்குப் பெண்ணியற்கையினால் ஐயம் எழுகிறது; அந்த மூலப் பரம்பொருள்தான் இராமபிரானாக அவதரித்திருக்கிறது; இரகுகுலத் தோன்றல், அதனால்தான் எனக்கு இஷ்டதேவதையானார்" என்று அவர் சொன்னார்.

ஆனால் சதிதேவிக்கு இதை நம்ப முடியவில்லை. பரமசிவன், மாயையின் வலியைப்பற்றி எண்ணிச் சிரித்து, 'சரி நீயே சென்று சோதித்து வா. உனக்கு ஐயம் நீங்கட்டும்' என்றார்.

சதிதேவி ஒரு வழிசெய்தாள்.

புனி புனி ஹ்ருதய விசார கரி தரி சிதாகர ரூபா
ஆகே ஹோயி சலி பந்த் ஜெஹி ஜேஹி ஆவித நரபூப

மீண்டும் மீண்டும் உள்ளத்தில் உன்னி, தேவி சீதையின் உருவத்தை எடுத்துக் கொண்டாள். எடுத்துக் கொண்டு, அரசகுமாரர் வரும் வழியின் முன்னால் போய் நின்றாள்.

இலக்குமணன் பார்த்து மயங்கிவிட்டான். ஆனால் எம்பெருமானை இராமபிரானே (ஸதீ கபட ஜானேஉ) சதியின் வேஷத்தைப் புரிந்து கொண்டார். இரண்டு கைகளையும் சேர்த்துக் கூப்பிக் கொண்டு, சதிதேவியை நோக்கி, 'தேவி, இடபக் கொடியோன் எங்கேயம்மா? காட்டில் எதற்காகத் தனியே சுற்றுகிறீர்கள்? என்று கேட்டுவிட்டார்.

சதிதேவி நடுங்கிவிட்டாள். ஒரே ஓட்டமாக சங்கரனிடம் ஓட ஆரம்பித்தாள். விடை கிடைத்து விட்டது. ஆனால் "அது பாம்பல்ல பழுதை" என்று நினைத்து, நல்ல நாகசர்ப்பத்தை எழுப்பி விட்டவன் அதன் படத்தையும் சீறுதலையும் கண்டு என்ன நிலை அடைவான்?

சதி திரும்பினாள். இராமன் அத்துடன் விடவில்லை. சதியின் கண்களுக்கு ஒரு பெரிய விருந்து சித்தமாயிருந்தது. எங்கே பார்த்தாலும் ஒரேதேவர்கள்; விஷ்ணு, பிரமன், சிவன் மற்றும் பல தேவர்களும் எல்லோரும் இராமனுக்கும் சீதைக்கும் பணிவிடை செய்து கொண்டிருந்தனர். அதுமட்டுமல்ல.

பூஜஹிம் ப்ரபுஹி தேவ பஹு பேஷா
ராம ரூப தூஸர நஹிம் தேக்கா.

'தேவர்கள் பல உருவத்தில் இராமனைப் பூஜித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இராமன் உருவம் மட்டும் ஒரே விதமாகத்தான் இருந்தது.' அவருடன் சீதையும் இருந்தாள்.

சதி புரிந்து கொண்டாள். இராமன் என்றும் அழியாத மூலப் பரம்பொருள்; மற்றத் தேவர்கள் அவர் இஷ்டத்துக்குக் கட்டுப் பட்டவர்கள்; இந்த 'மனைவியை இழந்து மயங்கி அழும் அரசகுமாரனும்' அந்த இராமனேதான்: என்று விளங்கிற்று.

இராமன் கருணையால் இந்தப் பரமரகசியத்தை அறிந்து வீட்டுக்கு வந்த சதிதேவிக்கு, ஒரு பேரிடி காத்து நின்றது. சிவபிரான் அவளுடன் முகங்கொடுத்துப் பேசவில்லை. ஆவலாய்ச் சென்ற தாக்ஷாயணி தேவி தான் உண்மையை அறிந்துகொண்டதாகச் சொன்னாளே தவிர, தான் செய்த தந்திரத்தைச் சொல்லவில்லை. ஆனால் சிவன் அறியாரா என்ன? சீதைவேஷம் எடுத்த இந்த சதியின் உடலை எப்படித் தீண்டுவது? தீண்டினால் பக்தி என்ன நிலை எய்தும்? என்று வருந்திய அவர் தேவியுடன் பேசவே இல்லை. தேவி துணுக்குற்றாள். ஆயினும் என்ன செய்வது? இந்த உடல் அழிந்தாலொழிய, சிவன் பிரியையாவது கூடாது என்று அறிந்து ஏக்கமுற்றாள்.

துளஸிதாஸர் தக்ஷயாகக் கதையை இங்கே கொணர்ந்து, சதியை யாகத்துக்கு அங்கே அனுப்பி அவளுக்கு அதனால் ஏற்பட்ட அவமானம் தாங்காமல் அவள் தன்னை அழித்துக் கொண்டதையும், மீண்டும் பர்வத குமாரியாய்ப் பிறந்து பரமசிவனை மணந்ததையும் சுவை ததும்பச் சொல்லுகிறார்.

மீண்டும் பார்வதி பரமசிவனை அணுகிப் பரமனுடையரகசியத்தை நன்கு உபதேசம் பெற்று இராமனுடைய கதையைக் கேட்டு ஆனந்தமடைகிறாள்; பக்தி எய்துகிறாள்.

ஆகவே, தேவருள் முக்கியமாகவும் பரம்பொருள்களாகவும் விளங்குகிற மூப்பரம்பொருளுக்கும் மூலப் பொருளான அந்தப்

பரம்பொருள் ஒன்று உண்டு. அதற்கு அழிவு தோற்றம் உருவம் நிலை ஒன்றும் கிடையாது. அது தன்னைத் தன் மாயையால், இச்சையால், வேண்டிய வண்ணம் தோற்றம் பெறச் செய்யவல்லது. அந்த நிலையிலும் அது பரம்பொருள் தான். தவிரவும் அதற்குக் கட்டுப்பட்டவர்களே இந்த மூன்று 'பரம்பொருள்களும்' என்பது தெளிவாகவும் திண்ணமாகவும் அறியப் பெறுகிறது. சிவனுக்கும் பூஜைக்கு உரியது அந்தப் பரமபொருள் என்று இந்தக் கதையூடே கண்டோம். மீண்டும் இந்தக் கதையூடேயே மற்றத் தேவர்களுக்கும் அது பூஜைக்கு உரியதே என்பதும் சொல்லப்படுகிறது. என்றாலும் வால்மீகி-இராமர் பேச்சிடையே, வால்மீகி முனி தெளிவாகச் சொல்வதாகத் துளஸி அறிவிக்கிறார்.

'நான் எங்கே சென்று தங்கலாம்? என்று இராமபிரான் வான்மீகி முனிவரைக் கேட்க அவர்,

ராம சுருப தம்ஹார வசன அகோசர புத்திவர
அவிகத அகத அபார நேதி நேதி அகம கஹ

ஹே இராமா! நீ யார் என்று நான் அறியேனா? உன் சொரூபம் வார்த்தைக்கும் மனத்துக்கும் புத்திக்கும் எட்டாததன்றோ! அடைய முடியாதது, சொல்ல முடியாதது! எல்லையற்றது. அதனால் அன்றோ வேதங்களும் 'இது இல்லை இப்படி இல்லை!' என்று வியந்து விம்மி வாய்புதைத்து நிற்கின்றன! தவிர

ஜக பேகன தும தேகனஹாரே
விதி ஹரி சம்பு நசாவ ன ஹா ரே

இந்த உலகத்தை விளையாட்டுப் பொம்மை போல் ஆட்டி வைத்து வேடிக்கை பார்ப்பவனும் நீயே. மேலும் பிர்மா, விஷ்ணு, சம்பு மூவரும் உன் இஷ்டப்படியேதான் இயங்குகின்றனர்!

இந்த ரகசியத்தை நன்கு தெளிவுபடுத்தவே, ஐயம் திரிபு அற நிலைநிறுத்தவே, துளஸி பலர் வாயிலாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். சம்புவே பார்வதிக்கு ராமநாம மஹிமையைச்

சொல்வதாக அநேக நூல்கள் சொல்கின்றன. இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்றாலும் பரம்பொருளின் தோற்றமே என்று அறியாமல் போனால், அது தப்பிதமாகும் என்பது துளஸிதாஸரின் கருத்து.

இதுவும் கம்பநாடரின் கருத்துக்கு ஒட்டியதே யாகும் என்பதைப் பின்வரும் செய்யுள்கள் மூலம் காணலாம். வந்தவன், 'மூப் பரம் பொருளுக்கும் முதல்வன்' என்ற கருத்தை இந்தச்செய்யுளில் கண்டு கொள்க:

இப்பரி சணிநக ருறையும் யாவரும்
மெய்ப்புகழ் புனைதர விளைய வீரர்கள்
தப்பற வடிநிழ றழுவி யேத்துற
மூப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்.

(பாலகாண்டம், திருவவதாரப்படலம். 139.)

சிவபிரான் அவன் பெயரை எப்பொழுதும் ஜபித்துக்கொண்டு இருப்பதால்தான் பல ஆற்றலும் பெற்றார் என்பதைப் பின்வரும் செய்யுளால் கண்டு கொள்ளலாம்:

மாவிலைச் சூலியார் வாழ்த்துகர்க் குயர்வரம்
ஓவலற் றுதவநின் னொருதனிப் பெயரியம்
பாவவிப் புடைமையால் ஆகும்; அப்பொருளையாம்
தேவநிற் கண்டவெற் கரிதெனோ தேரினே.

(கிட்கிந்தாகாண்டம், வாலி வதைப்படலம். 123.)

இந்தச் செய்யுளில், சிவன் எந்தப்பொருளின் பெயரைச் சொல்லி ஆற்றலைப் பெற்றாரோ, அந்தப் பொருளை இராமனில் கண்டான் வாலி என்பதும் பெறப்படுகிறது.

சிவன் பார்வதிக்கு இராமன் பெருமையை எடுத்துக் கூறியதாக முன்னே சொல்லிவந்தோம். அந்தக் கருத்தின் மூலத்தைக் கீழ்வரும் தனியனில் கண்டுகொள்ளவும்:

சம்ப நாடன் னுமைசெவி சாற்றும்பூங்
கொம்ப னுடன் கொழுந னிராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

(சம்பு அந்நாள் தன் உமை செவி சாற்றும் பூங்கொம்பு அன்னான் தன் கொழுநன் இராமப்பேர் பம்ப, நாள் தழைக்கும் கதை பாச் செய்த கம்பநாடன் என்று பிரித்துப் பொருள் கொள்க.)

மற்றும் பல பாக்கள் கொண்டு இக் கருத்தை வலியுறுத்தி யிருப்பதை எடுத்துக் காட்டலாம். தேவையின்று என்று விட்டு, விஷ்ணு அம்சம் இராமனுயிற்று என்பதைத் தெரிவிக்கும் செய்யுள் களை மட்டும் எடுத்துச்சொல்லி, இக்கட்டுரையைத் தலைக்கட்டுவாம்.

திரைகெழு பயோததி துயிலுந் தெய்வவான்
மாகத மலைபிணை வழுத்தி நெஞ்சினுற்
காகம லங்குவித் திருந்த காலையிற்
பாகதி யுணர்ந்தவர்க் குதவு பண்ணவன்.

கருமுகி லுமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

மசரத மனையவர் வரவும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னிறு செய்யயாம்
சசரத துரகமாக் கடல்கொள் காவலன்.
தசரதன் மதலையா வருதுந் தாரணி.

முடிவாக, துளஸிதாஸர் கம்பநாடர் இருவருமே, பரப்ரம்ம மானவரும் விஷ்ணு அம்சம் மூலம் வெளிப்பட்டவருமான நாராயணனே இராமபிரானாக அவதரித்தார் என்னுங்கருத்தில், ஒருமைப் பாடுடையவராகக் காணப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

[தொடரும்]

ஸ்ரீ:

# * குலசேகராழ்வார்

ஸ்ரீ T. N. கிருஷ்ணையங்கார் அவர்கள், ஆராய்ச்சியாளர்,
திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம்.

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு இலக்கிய மேதைகள் அநேகர் தோன்றி வந்திருக்கின்றனர். அவர்களுள் பாடியவரும் பாடல்பெற்றவருமாகச் சேரவேந்தரும் பலர் இருந்தனர். அவ் வேந்தரில் நம் குலசேகராழ்வார் கருவூராகிய வஞ்சிமாநகரத்தில் ஏழாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் அவதரித்து, எட்டாம் நூற்றூண்டின் முற்பகுதியில் சில ஆண்டுகள்வரை வாழ்ந்திருந்தனர்.

இவர் தம் சேரநாட்டை ஆண்டகாலத்துச் சிறிதும் செங்கோல் கோடாமல் ஆண்டுவந்த பின்பு, நீதில் நன்னெறியாகத் தாம்கண்ட பிரபத்தி மார்க்கத்தில் புகுந்து திருமால்பக்தியில் தலைசிறந்து, அத்திருமாலையும் அவன் தொண்டர்களையும் மிகவும் ஆராதித்து வந்தனர். ஸ்ரீரங்கத்துப் பெருமாளிடத்து மிகுந்த பக்தியுள்ளவராய் அப் பெருமானை ஸேவித்துக்கொண்டு, அந்தக்கோயில் திருமுற்றத்துத் தொண்டர் குழாத்தொடு தாமும் வாழ்தலையே விரும்பி, உலகவாழ்க்கையில் பற்றில்லாதவராக இருந்தனர்.

இங்ஙனம் இவர் உலகப்பற்றில்லாமலிருத்தற்குக் காரணமானவர் திருமாலடியார்களே என்று அமைச்சர் சிலர் எண்ணி, அவ் வடியார்களிடத்து இவருக்கு வெறுப்பையுண்டாக்கும்பொருட்டு, அப்பொழுது அரண்மனையிற் களவுபோன ரத்நாபரண மொன்றை அவ் வடியார்களே கவர்ந்திருக்க வேண்டுமென்று அவர்கள்மேல் ஒரு பழியைச் சுமத்த, உடனே நம் குலசேகரர் அடியார்கள் ஒருபொழுதும் அதனைச் செய்யார் என்று, அவர்களுக்காகத் தாமே பாம்புக்குடத்திற் கையிட்டுச் சூளுரைத்து அவ் வடியார் பெருமையை நிலைநாட்டினர் என்பர். இதனை,

---

* இது 16-11-1953ல் அகில இந்திய வானொலி நிலயத்தில் பேசப்பெற்று, அந்நிலயத்தார் அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.

"ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே"

என்று அபியுக்தர் பாடல் வலியுறுத்துகிறது.

இவர் அருளிச்செய்த திவ்யப்பிரபந்தம், பத்துப் பதிகங்களாகி நூற்றைந்து பாசுரங்களைக்கொண்ட பெருமாள் திருமொழி என்பதாம். இத் திருமொழியில் இவர் ஸ்ரீராமபிரானைத் தாலாட்டுகிற பாசுரத்தில் "எங்கள் குலத்து இன்னமுதே! இராகவனே! தாலேலோ" (பெருமாள் திருமொழி 8-3.) என்பதனால், இவரது குலம் க்ஷத்ரிய குலமென்று கொள்ளக்கிடக்கின்றது. இவர் தம்மைத் தாமே "கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன்" என்றும் "கொங்கர் கோன் குலசேகரன்" என்றும், தம் பெருமை தோன்றக் கூறியிருப்பதனால் அக்காலத்து இவரது தலைநகர் கொல்லிமலைப் பக்கத்தேயுள்ள கொல்லிநகரம் என்பதும், பாண்டியனின் தலைநகரமான மதுரையிலும், சோழனின் தலைநகரமான உறையூரிலும், கொங்குநாட்டிலும் இவர்க்கு ஏதோ உரிமையிருந்தது என்றும் தெரிகிறது.

இவர் திருவரங்கப்பெருமானிடம் தாம்கொண்ட பக்திப்பெருக்குத் தோன்றும்படி,

"இணையில்லா இன்னிசையாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்தத்
துணையில்லாத் தொன்மறைநூல் தோத்திரத்தால்
தொன்மலர்க்கண் அயன்வணங்கி ஓவாது ஏத்த
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
மதிலரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்
மணிவண்ணன் அம்மானைக் கண்டுகொண்டு என்
மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே"

என்பது போன்ற பத்துப் பாசுரங்களால் முதற் பதிகத்தையும், அப்பெருமானுடைய மெய்யடியாரிடத்துத் தமக்குள்ள அளவுகடந்த அன்பு தோன்ற,

"தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்ததும் சுடர்வாளியால்
நீடுமாமரம் செற்றதும் நிரை மேய்த்ததும் இவையே நினைந்து
ஆடிப்பாடி அரங்க! ஓ என்று அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆடநாம்பெறில் கங்கைநீர் குடைந்து ஆடும்வேட்கை என்னாவதே?"

என்பது போன்ற பாசுரங்களால் இரண்டாம் பதிகத்தையும், திருமாலடியாரல்லாத உலகினரோடு தமக்குச் சிறிதும் தொடர்பின்மையும் அத்திருமாலிடத்துத் தமக்குள்ள த்ருடபக்தியும் தோன்ற

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையம் தன்னொடு கூடுவ தில்லையான்
ஐயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தேன் என்றன் மாலுக்கே"

என்பது போன்ற பாசுரங்களால் மூன்றாம் பதிகத்தையும், திருவேங்கடமலையோடு தொடர்புள்ளதாயிருப்பின், அது எத்தகைய இழிபிறவியாயிருப்பினும் அப் பிறவியைத் தாம் விரும்புவதாக

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

என்பது போன்ற பாசுரங்களால் "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்று நான்காம் பதிகத்தையும், தம் பழைய தலைநகரான வஞ்சியை அடுத்து அர்ச்சாவதாரம் கொண்டருளிய திருவித்துவக்கோட்டு எம்பெருமானை அல்லது தமக்குப் புகலிடமின்மையை

"கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதில்புடைசூழ் வித்துவக்கோட் டம்மான்! நீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே"

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மான்! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே"

என்பன போன்ற பல திருஷ்டாந்தங்கள் மூலமாகத் தெளிவித்து ஐந்தாம் பதிகத்தையும், கண்ணபிரானிடம் காதல்மிக்க ஆயர்குல மகளிர் அப் பெருமானிடம் ஊடல்கொண்டு கூறுவதாக

"மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு
வீங்கிருள்வாய் என்றன் வீதியூடே
பொன்னொத்த ஆடை குக்கூடலிட்டுப்
போகின்ற போது நான் கண்டுநின்றேன்
கண்ணுற்றவளை நீ கண்ணாலிட்டுக்
கைவிளிக்கின்றதும் கண்டேநின்றேன்
என்னுக்கு அவளைவிட்டு இங்கு வந்தாய்?
இன்னும் அங்கேநட நம்பிநீயே"

என்பது போன்ற பாசுரங்களால் ஆறும்பதிகத்தையும், கண்ணனது பிள்ளைப்பருவத்துத் திருவிளையாடல்களைக் கண்டுகளிக்கும் பாக்கியம், வளர்த்த தாயான யசோதைப் பிராட்டிக்கு வாய்த்தது போல, அவனைப் பெற்ற தாயான தனக்கு வாயாமையை நினைந்து (கண்ணனைக் கண்ட போது) தேவகியார் புலம்புவதாக ஏழாம்பதிகத்தையும், கௌசலாதேவி ஸ்ரீராமனைப் புதல்வனாகப் பெற்ற பேற்றையும், மற்றும் இராமனுடைய வீரச்செயல்களையும் நினைந்து அவனது குழவிப் பருவத்தில் தாலாட்டுவதாக,

"கொங்குமலி கருங்குழலாள் கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தம்மலி கணபுரத்துஎன் கருமணியே!
எங்கள்குலத்து இன்னமுதே! இராகவனே! தாலேலோ"

என்பது போன்ற பாசுரங்களால் எட்டாம் பதிகத்தையும் இராமன் காடு நோக்கிச் சென்ற பிரிவாற்றாமையால், அவனது இளமைச் செயல்களைக் காணும் பேறு வாய்க்காமையை நினைந்து தசரதன் புலம்புவதாக ஒன்பதாம் பதிகத்தையும், அந்த ராமபிரானின் அவதாரம் முதல் அவர் பரந்தாமம் சேர்ந்தது வரை நிகழ்ந்த அருஞ்செயல்களை நினைந்து அவற்றைச் சித்ரகூடத்துத் திருமால்பரமாக்கிப் பத்தாம் பதிகத்தையும், இப்படியாக ஒவ்வொன்றையும் கேட்போர் செவியும் உள்ளமும் குளிர்ந்து பரவசமாகும்படி சுவைபெறப் பாடியுள்ளார்.

இவற்றுள் தேவகி புலம்புவதாகக் குலசேகராழ்வார் இயற்றிய பாடல்களிற் சிலவற்றை ஆராய்ந்து நோக்குவோம். பாலப்பருவத்துக் குழந்தை தவழ்ந்தும் எழுந்து தள்ளாடி நடந்தும் புழுதியை அளைந்து அப்படியே பால் குடிப்பதை நினைந்து தாயின் மார்பில் அணையுமாம். இன்னும், தாயுண்ணும்போது அவள் உண்கலத்துச் சோற்றைத் தன் அழகிய சிவந்த சிறு கைகளால் வாரித் தன் வாயில் இட்டுக்கொண்டு சிதறுமாம். இப்படிக் குழந்தை புழுதியோடு வந்து தன் மார்பில் அணைதலையும், உண்கலத்துச் சோற்றை அளைந்துண்டு எஞ்சியதைத் தான் உண்ணுதலையும் தாய் விரும்புவாளாம். இந்தப் பாக்கியங்களை யெல்லாம் பத்து மாதம் சுமந்து வருந்திக் குழந்தையைப் பெற்றும் அநுபவியாமல் இழந்த பாவியாகிய என்னை என் தாய் எதற்காகப் பெண்ணாகப் பெற்ருள்? என்று புலம்புகிருளாம் தேவகி. இதனைக் குலசேகரர் சித்திரித்துக் காட்டுவதைப் பாருங்கள்.

"தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்து எழுந்து; தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி யாடிவந்து, என்றன்
மார்பில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன், ஓ! கொடுவினையேன்;
என்னை என்செய்யப் பெற்றது? எம்மோயே."

இதில் தான் பெண்ணாகப் பிறந்ததன் பலனை அநுபவிக்கவேயில்லை யென்றும், இப்படி யொரு பயனில்லாத பெண்ணை என் அன்னை எதற்காகப் பெற்ருள்? என்றும் கருத்துத் தோன்றப் பாடியிருக்கும் நயம் அறிக.

இன்னும், கண்ணன் குழவிப் பருவத்திலிருக்கும்பொழுது அவனது அழகை எப்பொழுதும் அருகேயிருந்து தெவிட்டாமல் பார்த்துப் பருகிக்கொண்டேயிருப்பாராம் நந்தகோபர். அப்பொழுது கண்ணனுக்கு ஊட்டுந்தாய்; அவனை வளர்க்கும் தாய், சிற்றன்னை பெரியன்னை முதலான தாயார் பலரும் அவர்களைப் பெற்ற பாட்டியர் பலருமாக

முதிர்ந்த கிழவியர் ஒவ்வொருவராக வந்திருந்து குழந்தையைத் தம் தம்முடைய தொடையில் இருக்கும்படி செய்துகொண்டு என் அப்பனே! அமிர்தமே! என்று கொஞ்சிக் கூப்பிட்டுக் குழந்தாய்! உன்னுடைய அப்பா யாரென்று காட்டு கண்ணே! என்று லாளிப்பார்களாம். அப்பொழுது கண்ணனான குழந்தை, தன் அழகிய கடைக்கண்ணால் நந்தகோபனை நோக்கியும்; அழகிய தாமரையிதழ்போன்ற கைவிரலை நீட்டியும் நந்தகோபனைத் தகப்பன் என்று கொள்ளும்படி சைகை காட்டுமாம். இப்படித் தந்தை இன்னான் என்று என் குழந்தை தன் புருஷனைக் காட்டிப் பார்க்கும் பாக்கியத்தை வளர்த்த தாயான யசோதை அடைந்தாளே; யான் பெற்ற தாயாயிருந்தும் என் குழந்தை என் புருஷனைச் சுட்டிக் காட்டிப் பார்க்கும் பாக்யத்தை அடையவில்லையே; என்று புலம்புகிறாளாம் தேவகி. இதனை எவ்வளவு அழகாக நம் குலசேகரர் தாய்மையன்பு தோன்றச் சித்திரித்துக் காட்டுகிறார் பாருங்கள்.

"மூர்த்தை நன்முறை அன்புடை மகளிர்
   முறைமுறை தத்தம் குறங்கிடை இருத்தி
எந்தையே! எம்தம் குலப்பெருஞ் சுடரே!
   எழுமுகிற் கணத்து எழில்கவர் ஏறே!
உந்தை யாவன்! என்றுரைப்ப நின்செங்கேழ்
   விரலினும் கடைக்கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன் நல்வினை யில்லா
   நங்கள் கோன்வசு தேவன் பெற்றிலனே"

என்றார். இதில், 'நந்தன்' என்றதனால் ஆனந்தமுடையவன் என்றும், 'வசுதேவன்' என்றதனால் செல்வமுடையவன் என்றும், உறுப்புப் பொருள் தந்து செல்வப் பேறு ஒருவற்கும், அதனை அநுபவிக்கும் பேறு வேறொருவற்கும் ஆயிற்று என்னும் உட்பொருளும் தோன்ற வைத்த நயம் அறிக.

இன்னும், குழந்தை அதன் அழகிய கைவிரலையே வாயிலிட்டுக் கொண்டு சுவைத்துப் பருகுமாம். அதனைக்கண்டு தாய் அவ் விரலைக் குழந்தையின் வாயிலிருந்து எடுத்தால் அப்பொழுது சிறுகோபத்தோடு தாயின் செவிக்கு இனிக்கும்படி, மழலைச் சொற்கள் சிலவற்றைச்

சொல்லுமாம். இன்னும் வாயினின்று அமிர்து ஒழுகும் குழந்தையைத் தாய் ஒரு முத்தம் தா கண்ணே! என்று விரும்பிக் கேட்பாளாம். அப்பொழுது அது தன் நெற்றியிலணிந்திருந்த சுட்டி யசையும்படி புன்சிரிப்போடு நெருங்கித் தாயின் முகத்தோடு முகம்வைத்து முத்தம் கொடுக்குமாம். அந்த சமயத்தில், தாய்க்குக் குழந்தையின் முகத்தில் தன் கணவனின் இனிமையழகு தோன்றி உடனேயே காணகளேபராங்கள் எல்லாம் குளிர்ந்துவிடுமாம். இப்படி இந்த இன்பங்களெல்லாவற்றையும் வளர்த்த தாயான யசோதை அடைந்தாளே; பெற்ற தாயான என்னை யானே 'அபாக்யவதி' என்று சொல்லிக்கொள்ளும்படி எனக்கு ஒன்றுகூடக் கிடைக்கவில்லையே என்று புலம்புகிறாளாம் தேவகி. இதனை நம் குலசேகரர் சித்திரித்துக் காட்டுவதைப் பாருங்கள்.

"மருவும் நின் திரு நெற்றியிற் சுட்டி
 அசைதர மணிவாயிடை முத்தம்
தருதலும் உன் தன் தாதையைப் போலும்
 வடிவுகண்டு உள்ளம் உள்குளிர
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
 வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும்
திருவிலேன்; ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்
 தெய்வநங்கை யசோதை பெற்றாளே."

இதில் குழந்தை முத்தங் கொடுக்கும்போது தாய்க்கு ஏற்படும் மெய்ப்பாடுகளை, உள்ளத்து நிகழ்ச்சிகளை, எவ்வளவு அழகாகவும் கூடமாகவும் கூறியிருக்கிறாரென்பது அறிஞர்கள் ஆராய்ந்து அறியக் கிடக்கிறது.

இதுபோன்று இவர் இயற்றிய பாடல்கள் பல இவரது பக்தியின் பெருமையோடு இலக்கியமேதையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஆதலால் ஒவ்வொருவரும் இவரது பெருமாள்திருமொழிப் பாசுரங்களை நன்கு ஆராய்ந்து அறிந்து அனுபவிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

---

# கீழ் நீர் (Water Springs)

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(பிருகத் சங்கிதையில் கண்டது)

வஞ்சிமரத்துக்கு மேற்கில் மூன்று முழ தூரத்தில் ஒன்றரையாள் ஆழத்தில் மேற்கு முகமாக நீரோடும். அவ்விடத்தில் கிணறு தோண்டும்பொழுது அரைஆள் ஆழத்தில் ஒரு தேரை இருக்கும். அதன் அடியில் மஞ்சள் நிறமான மண் இருக்கும். அதனடியில் ஒரு கல் நீரோட்டத்தைத் தடுத்திருக்கும். அதனடியில் நல்ல நீர் உண்டு.

நாவல் மரத்துக்கு வடக்கில் மூன்றுமுழ தூரத்தில் இரண்டாள் ஆழத்தில் கிழக்குமுகமாக நீரோடும்; ஆங்குக்கிணறுதோண்டும்பொழுது மணல் வெள்ளையாகவும் உலோக நிறமாகவும் காணப்படும். ஒரு ஆள் ஆழத்தில் ஒரு தவளை இருக்கும். நாவல் மரத்தின் கிழக்கில், அருகில் எறும்புப் புற்றிருந்தால், அப் புற்றிற்குத் தெற்கில் நீரோட்டமுண்டு. இரண்டாள் ஆழத்தில் மிக இனிய நீர் கிடைக்கும். கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் ஒரு மீனிருக்கும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் புறாவின் நிறமுடைய கல் தோன்றும். அதனடியில் கருமண் உண்டு. அதனடியில் நீரோட்டமுண்டு. நீர் எந்நாளும் வற்றாது.

அத்தி மரத்தின் மேற்கே மூன்றுமுழ தூரத்தில் இரண்டரையாள் ஆழத்தில் நன்னீரோட்டமுண்டு. அங்கு ஒரு ஆள் ஆழத்தில் ஒரு பாம்பிருக்கும். அதனடியில் கருநிறக் கல் தோன்றும். அதனடியில் நீரோட்டமுண்டு.

மருத மரத்தின் வடக்கே எறும்புப் புற்றிருந்தால், அப்புற்றின் மேற்கே மூன்றுமுழ தூரத்தில் மூன்றரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அங்குக் கிணறு தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் பல்லி, ஓணான் (Iguana) இருக்கும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் கருமண் தோன்றும். அதனடியில் நல்ல மணத்தோடு கூடிய, வெண்மை கலந்த மஞ்சள்நிறமான மண் தோன்றும். அதனடியில் பெருநீர் உண்டு.

எறும்புப் புற்றின்மேல் வெண்ணொச்சி வளர்ந்திருந்தால், அப் புற்றின் தெற்கே மூன்று முழ தூரத்தில் இரண்டேகால் ஆள் ஆழத் தில் எந்நாளும் வற்றாத இனிய நீர் கிடைக்கும். அங்குக் கிணறு தோண்டுகையில், அரையாள் ஆழத்தில் செம்மீனும், அதன்கீழ் அரை யாள் ஆழத்தில் மஞ்சள் மண்ணும், அதன்கீழ் அரையாள் ஆழத்தில் வெண் மண்ணும், அதன்கீழ் அரையாள் ஆழத்தில் கூழாங்கற்களும் தோன்றும். அதனடியில் நீரோட்டமுண்டு.

இலந்தை மரத்தின் கிழக்கே எறும்புப் புற்றிருந்தால், அதற்கு மேற்கே மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் ஒரு வெள்ளைப் பல்லி தோன்றும். இலந்தைமரமும் பலாசமரமும் ஒருங்கிருந்தால் அவற்றின் மேற்கே மூன்றேகால் ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத் தில் ஒரு தவளை யிருக்கும்.

வில்வமரமும் அத்திமரமும் ஒருங்கு வளர்ந்திருந்தால், அவற் றின் தெற்கே மூன்றுமுழ தூரத்தில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்ட முண்டு. கிணறு தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் ஒரு கருந் தவளை யிருக்கும். பேயத்திமரத்தின் அடியில் எறும்புப் புற்றிருந்தால் அவ்விடத்தில் மூன்றரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது மேற்கு முகமாக ஓடும். அங்கு, கிணறு தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் வெண்மை கலந்த மஞ்சள் நிறமான மண் தோன்றும். அத னடியில் பால் போன்ற கல் இருக்கும். அதனடியில் குமுதமலரை யொத்த நிறமுடைய எலி காணப்படும்.

வறண்டநிலத்தில் சிறுகம்புல் வளர்ந்திருந்தால், அதன் கிழக்கில் மூன்று முழ தூரத்தில் நீரோட்டமுண்டு. அது தெற்கு முகமாக ஓடும். அங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு முழ ஆழத்தில் நீலோற்பல மல ரைப் போன்ற, அல்லது, புறாவை யொத்த நிறமுடைய மண் காணப் படும். அதனடியில் வெள்ளாட்டின் மணமுடைய மீன் இருக்கும். அதனடியில் சிறு அளவில் உப்புநீரிருக்கும்.

வங்க மரத்தின் (Sonaka) வடமேற்கில் இரண்டு முழ தூரத்தில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

தான்றிக்காய் மரத்தின் தெற்கே அருகில் எறும்புப் புற்றிருந்தால், அப்புற்றின் கிழக்கே ஒன்றரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அம் மரத்தின் மேற்கே ஒரு முழ தூரத்தில் புற்றிருந்தால் நாலரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது வடக்குமுகமாக ஓடும். ஆங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் வெள்ளை விஸ்வம்பரம் காணப்படும். அதனடியில் நீலங்கலந்த புகை நிறமான கல் காணப் படும். அதனடியில் மேற்குமுகமாக ஓடும் நீரோட்டமுண்டு. அது மூன்றாண்டுகளில் வற்றிவிடும்.

மலையத்திமரத்தின் வடகிழக்கில் எறும்புப் புற்றின்மேல் தருப்பை வளர்ந்திருந்தால், அம்மரத்திற்கும் புற்றிற்கும் இடையில் நாலரையாள் ஆழத்தில் வற்றாத நீரோட்ட முண்டு. கிணறுதோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் தாமரைமலரின் உட்பகுதியிலுள்ள நிறத்தை யொத்த நிற முடைய பாம்பு காணப்படும். அதனடியில் மண் செந்நிறமாக இருக்கும். அதனடியில் குருவிந்தக் கற்கள் கிடைக்கும். அதனடியில் நீரோட்டம் உண்டு.

ஏழிலைப்பாலை மரத்தைச் சுற்றிலும் எறும்புப் புற்றிருந்தால், அம் மரத்தின் வடக்கே ஐந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில் அரையாள் ஆழத்தில் ஒரு பசுந்தவளை யிருக் கும். அதனடியில் மஞ்சள் நிறமான மண் காணப்படும். அதனடியில் மேகத்தை யொத்த நிறமுடைய கல் காணப்படும். அதனடியில் நன்னீ ரோட்டம் வடக்குமுகமாக ஓடும்.

பொதுவாக, ஒரு மரத்தின் அடியில் தவளை காணப்படின் அம் மரத்திற்கு ஒரு முழ தூரத்தில் நீரோட்டமுண்டு. அது நாலரையாள் ஆழத்தில் இருக்கும். ஆங்குக் கிணறு தோண்டுகையில் ஒருஆள் ஆழத் தில் கீரிப்பிள்ளை யிருக்கும். அதனடியில் கருமண் காணப்படும். அத னடியில், முறையே மஞ்சள் மண், வெள்ளை மண், தவளையின் தோலை யொத்த கல் காணப்படும். அதனடியில் நீரோட்டமுண்டு.

புங்கமரத்தின் தெற்கே பாம்புவளை யிருந்தால் அவ் வளையின் தெற்கே இரண்டு முழ தூரத்தில் மூன்றரையாள் ஆழத்தில் நீரோட்ட முண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில், அரையாள் ஆழத்தில் ஆமை யிருக்கும். அதனடியில் கிழக்கு முகமாகவும் வடக்கு முகமாக மாகவும் ஓடுகிற இரண்டு கன்னீரோட்டமுண்டு, அதனடியில் பசுமை நிறமான கல் காணப்படும். அதனடியில் நீருண்டு.

இருப்பை மரத்தின் வடக்கே பாம்புவளை யிருந்தால், அவ்வளைக்கு ஐந்து முழ தூரத்தில் ஏழரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில், ஒரு ஆள் ஆழத்தில் நாகம் இருக்கும். அதன் அடியில் முறையே கருஞ்சிவப்பு மண், கொள்ளின் நிறமுடைய கல் காணப்படும். அதனடியில் எந்நாளும் வற்றாத நீரோட்டமுண்டு. அது கிழக்கு முகமாக ஓடும்.

மஞ்சாடியின் தெற்கே வளர்ந்தோங்கிய எறும்புப் புற்றின்மேல் தருப்பையும் அறுகம்புல்லும் வளர்ந்திருந்தால், அப் புற்றின் மேற்கே ஐந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது கிழக்கு முகமாக ஓடும்.

கடப்பமரத்தின் மேற்கே பாம்புவளை யிருந்தால் அவ் வளையின் வடக்கே மூன்று முழ தூரத்தில் ஐந்தே முக்கால் ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது வடக்கு முகமாக ஓடும், இரும்புச் சத்துள்ள அந்நீர் எந்நாளும் வற்றாது. ஆங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் மஞ்சள் நிறமான மண் காணப்படும். அதனடியில் பொன்னிறமான தவளை காணப்படும்.

பனை, தென்னை மரங்களின் அடியில் அவற்றைச் சுற்றிலும் எறும்புப் புற்றிருந்தால், அம் மரத்தின் மேற்கே ஆறு முழ தூரத்தில் நான்காள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

விளாமரத்தின் தெற்கே பாம்புவளை யிருந்தால், அவ் வளையின் வடக்கே ஏழு முழ தூரத்தில் ஐந்தாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

அங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் பல நிறமுடைய பாம்பு காணப்படும். அதனடியில் கருமண் இருக்கும். அதனடியில் ஒரு கல், ஊற்றை மறைத்திருக்கும். அக் கல்லின் மேற்கே வெள்ளை மண் இருக்கும். அக் கல்லின் அடியில் நீரோட்டமுண்டு. அது வடக்கு முகமாக ஓடும்.

மலையத்திக்கு வடக்கே, இலந்தை மரமாவது பாம்பு வளையாவது இருந்தால், அவற்றிற்குத் தெற்கே ஆறுமுழ தூரத்தில் மூன்றரை யாள் ஆழத்தில் நல்ல நீர்ப்பெருக்குண்டு. ஆங்குக் கிணறு தோண்டு கையில் ஒரு ஆள் ஆழத்தில் ஆமை இருக்கும். அதன் கீழ் ஒரு ஆள் ஆழத்தில் புழுதியால் மூடப்பட்ட கல் காணப்படும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் மண்ணும் மணலும் கலந்த பகுதி காணப்படும். அதன்கீழ் நீர்ப்பெருக்குண்டு. அது தெற்குமுகமாக ஓடும். இதற்கு வடக்கே மற்றொரு நீரோட்டமுண்டு. அது கிழக்கு முகமாக ஓடும்.

மஞ்சள் மரத்திற்கு வடக்கே எறும்புப் புற்றிருந்தால் அப் புற்றிற்குக் கிழக்கே மூன்று முழ தூரத்தில் ஐந்தேமுக்கால் ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. ஆங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் கரும்பாம்பு இருக்கும். அதனடியில், மரகதம் போன்ற பச்சை நிறக்கல் காணப்படும். அதனடியில் கரிசல் மண் காணப்படும். அதனடியில் ஓர் நீர்ப்பெருக்குண்டு. அது மேற்குமுகமாக ஓடும். அந் நீரோட்டத்திற்குத் தெற்கே வேறொரு நீரோட்டமுண்டு.

வன்மையான நிலத்தில் நீர்வளமுள்ள இடத்து வளருகின்ற மரம் செடிகள் வளர்ந்திருக்குமானாலும் இலாமிச்சை, அறுகம்புல் மிக நன்றாகச் செழித்திருக்குமாயினும் அவ்விடத்தில் ஒரு ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

கெண்டபாரி, சிவதை, நாகத்தி, நவமல்லிகை ஆகிய இவைகளுக்குத் தெற்கே இரண்டு முழ தூரத்தில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. எவ்விடத்தில் மரங்கள் தாழ்ந்த கிளைகளோடும்

குறுகிய கணுக்களோடும் செழிப்பாக வளர்ந்திருக்கின்றனவோ அங்கே அவற்றினருகில் நல்ல நீரோட்டமுண்டு. தடித்த இலைகளும் பொந்துகளும் நிறைந்த மரங்களிருக்குமிடத்தில் நீர் கிடைக்காது.

மஞ்சாடி, காட்டுமா, கெட்டிலிங்கை, செங்கொட்டை, வில்வம், அழிஞ்சில், களா, வாகை, அசோகு, அதிபலை ஆகிய மரங்கள் செழித்து வளர்ந்திருக்க, அம்மரங்களைச் சுற்றி எறும்புப் புற்றிருந்தால் அம் மரங்களுக்கு வடக்கே மூன்று முழ தூரத்தில் நாலரையாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு.

புல்லே காணப்படாத இடத்தில் புல் காணப்பட்டாலும், புல் நிறைந்துள்ள இடத்தில் இடையில் புல்லே இல்லாதிருந்தாலும் அப் பகுதிகளினடியில் நீரோட்டமுண்டு. அல்லது புதையலுண்டு. முள்ளுடைய மரங்கள் முள்ளின்றி வளர்திருந்தாலும் முள்ளில்லாத மரங்கள் முள்ளுடையனவாக வளர்ந்திருந்தாலும் அம் மரங்களுக்கு மேற்கே மூன்று முழ தூரத்தில் மூன்றேமுக்கால் ஆள் ஆழத்தில் நீரோட்டம் உண்டு; அல்லது புதையலுண்டு, எவ்விடத்தில் நம் கால் படும்பொழுது பெருஞ் சத்தம் உண்டாகிறதோ அவ்விடத்தில் மூன்றரை ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அது வடக்குமுகமாக ஓடும். ஒரு மரத்தின் கிளை தாழ்ந்திருந்தாலும் வெளுத்திருந்தாலும் அக் கிளையினடியில் மூன்றுள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. மலர்களோ பழங்களோ நன்கு செழித்து வளர்ச்சியுற்றிருந்தாலும், மிகுதியாகக் காணப்பட்டாலும் அம் மரத்திற்குக் கிழக்கே மூன்று முழ தூரத்தில் நான்காள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அதனடியில் கற்களும் மஞ்சள் நிறமான மண்ணும் காணப்படும்.

கண்டங்கத்திரி முள்ளில்லாது வெள்ளைமலர்களோடு வளர்ந்திருக்குமானல் அவ்விடத்தில் மூன்றரையாள் ஆழத்தில் நீரோட்டம் உண்டு. வன்னிலத்தில் பேரீச்சமரம் இரண்டு கிளைகளோடு மாத்திரம் வளர்ந்திருந்தால் அம் மரத்தின் மேற்கே மூன்றுள் ஆழத்தில்

நீரோட்டமுண்டு. கோங்கு, பலாச, ஆகிய இவைகள் வெள்ளை மலர்களோடு காணப்பட்டால் அம் மரங்களுக்கு வடக்கே இரண்டு முழ தூரத்தில் மூன்றாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. எவ்விடத்தில் வெப்ப அலைகளோ புகைகளோ காணப்படுமோ அவ்விடத்தில் இரண்டாள் ஆழத்தில் பெருத்த நீரோட்டமுண்டு. எவ்விடத்தில் பயிர்கள் அழிந்து படுகின்றனவோ, அல்லது செழிப்பாக வளர்கின்றனவோ, அல்லது வெளுத்துக் காணப்படுகின்றனவோ அவ்விடத்தில் இரண்டாள் ஆழத்தில் பெருத்த நீரோட்டமுண்டு. வன்னிலத்தில் நீரோட்டம் பெரும்பாலும் கழுதையின் காது போன்ற அமைப்பையுடையது.

பீலுமரத்தின் (ஊவக்காய் மரம், தேக்கு வகை) வடகிழக்கில் எறும்புப் புற்றிருந்தால், அப் புற்றின் மேற்கே ஐந்தாள் ஆழத்தில் நீர்ப்பெருக்குண்டு. அந் நீரோட்டம் வடக்கு முகமாக ஓடும். அங்குக் கிணறு தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் பச்சையும் மஞ்சளும் கலந்த நிறமுடைய மண் காணப்படும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் பச்சைநிற மண் காணப்படும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் ஒரு பாறை காணப்படும். அதனடியில் ஒரு ஆள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அந்த மரத்தின் கிழக்கே எறும்புப் புற்றிருந்தால் அம் மரத்தின் தெற்கே காலரை முழ தூரத்தில் ஏழாள் ஆழத்தில் நீரோட்டமுண்டு. அங்குத் தோண்டுகையில் ஒரு ஆள் ஆழத்தில் வெள்ளையும் கருப்புமாகிய புள்ளிகளையுடைய ஒருமுழ நீளமுள்ள பாம்பு காணப்படும். அதன் தெற்கே பெருத்தநீரோட்டமுண்டு. நீர் உப்பாயிருக்கும்.

(தொடரும்)